பல் தொழில் பயிற்சி பயிலகங்கள் அமைத்தல்.

*வினா எண் 653—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிதாக ஐந்து பாலிடெக்னிக்குகள் துவக்கலாமென்று தொழில் நுட்பக் கல்வி வாரியம் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் பெண்களுக்கென ஒரு பாலிடெக்னிக் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): 28—11—1980 அன்று நடந்த மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரிய கூட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பல்தொழில் பயிற்சி பயிலகங்கள் அமைக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது:

(1) பட்டுக்கோட்டை: அரசினர் பாலிடெக்னிக்.

(2) திருச்சி: திரு. நாராயணசாமி அய்யர் அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.

(3) கோவை குன்னியமுத்தூர்: வி. எல். வி. நாயுடு அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(4) சேலம்: திரு. சௌடேஸ்வரி மகாஜன அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.

(5) சேலம் குமாரபாளையம்: ஜே. கே. ரங்கம்மாள் அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(6) மதுரை சுலைமான்; ருக்மணி அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(இ) இல்லை.

TRUTH ALONE TRIUMPHS